

# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## துன்பத்தில் சோர்ந்து போகாத வாழ்வின் இரகசியம்!

‘இளைஞர்’ இளைப்படைந்து சோர்ந்து போவார்கள்! என ஏசாயா தீர்க்கதரிசி குறிப்பிடுவதை வைத்துப்பார்த்தால், சோர்வில்லாத வாழ்விற்கு ‘வயோதிபர்’ என்றே நாம் கருதத் தோன்றும்! ஆனால், அவரோ அப்படிக்கூறாமல் ‘கர்த்தருக்கு காத்திருக்கிறவர்களோ’ புதுபெலன் அடைந்து ....சோர்ந்து போக மாட்டார்கள்” என்றலல்லவா கூறி முடித்தார்! (ஏசாயா.40:30,31).

ஆகவே, இவர்களின் ‘புதுபெலன்’ இரகசியம் கேளுங்கள்: ஏசாயா 40:31-ம் வசனத்தின்படி, எத்துன்ப சூழ்நிலையிலும், நாள்தோறும் “கழுகுகளைப்போல் செட்டைகளை அடித்து” உயர எழும்புவார்கள்! **ஆம், அவர்களின் ‘ஜெப நேரமே’ அவர்களின் அந்த உயர் ஸ்தலம்!** அந்த உயர்ந்த ஜெப ஸ்தலத்தில் ‘கர்த்தருக்கு காத்திருந்து’ தங்கள் அன்றாட பெலனைப் பெற்று திரும்புவார்கள்! இவர்களே, எத்துன்பத்தில் ஓடினாலும் இளைப்படையார்கள்! எந்த சூழ்நிலையில் நடந்தாலும் சோர்ந்து போகார்கள்! ஏன் தெரியுமா? “உன்னதமே, அவர்களின் பெலன்!” அல்லேலூயா.

_tr


பெட்டகம் 23

ஜுலை 2021

பரல்கள் 07



## பெற்ற அபிஷேகம் இழப்பது துயரம்!

தேவனுக்கென்று நசரேயனாயிருந்த சிம்சோனின் தலையில் சவரக்கத்தி படவேகூடாது! என உரைக்கப்பட்டதின் முகாந்திரம், 'கர்த்தரின் ஆவி அவன் மேல் வல்லமையாய் நிலைத்திருக்க வேண்டும்' என்பதேயாகும். சிம்சோன் என்று தன் தலைமுடியை இழக்கிறானோ, அன்றே கர்த்தர் அவனைவிட்டு விலகிவிடுவார் என்பதை சிம்சோனும் அறிந்திருந்தான்! (நியா.13).

சோதனை வேளையில் "நாம் பாவத்தில் வீழ்வது" நம் அபிஷேகத்தை இழக்கும் சோகமேயாகும்! 'வேசித்தன பாவம்' சிம்சோனின் தலைமுடியை சிரைத்து, அவனது அபிஷேகத்தை பறித்து விட்டது! இன்றும் புதிய உடன்படிக்கை ஜீவியத்தில், 'வேசித்தனத்தின் மடியில்' பரிசுத்தாவியின் பெலனையும், தங்கள் சிரசின்மேல் தங்கியிருந்த 'ஆனந்த தைலத்தையும்' இழந்த சிம்சோன்கள் ஏராளமாய் இருக்கிறார்கள்! சிம்சோனை ஒப்பிட்டுக் கூற வேண்டுமென்றால் "இவர்களின் தலைமுடி சிரைக்கப்பட்டது!" என்றே கூற வேண்டும்! அதுபோலவே, யாரோ நமக்குச் செய்துவிட்ட சில தீமைகள், பரிகாசங்கள் அல்லது ஏற்பட்ட அவமானங்கள், நம் தலைமுடி சிரைக்கப்பட ஒப்புக்கொடுப்பது சரிதானோ? யார்யாரோ அல்லது எந்தெந்த சூழ்நிலைகளோ "என் பெலனாகிய அபிஷேகத்தை" சிரைத்துவிட அனுமதித்திட கூடவே கூடாது!

*-Ed*

**2021 'பரலோக பொக்கிஷங்கள்' – வருட சந்தா ரூ.150.00**

சந்தா புதுப்பிக்காதவர்கள் **ஜூலை 10-ம் தேதிக்குள்** அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் **3** பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.**125.00** அனுப்புங்கள். அயல்நாடு ஒரு பிரதி ரூ.**900/-** அனுப்ப வேண்டும்.

**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்!**
**அசல் உயர்த்தி போலி அகற்றும்!**
**சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
A/c no: **502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : **PARALOGA POKKISHANGAL**, 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.), Madurai - 625 018, S.India Cell : 9843049935 Ph: 0452 7966138
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : paralogapokkishangal

## புயல் காற்றில் 'நறுமணம் வீசும் தோட்டமே' அவரது சபை!

**ம**கிமை நிறைந்த ஓர் சாட்சி வேதப் புத்தகத்தில் உண்டு. *"வாடையே! எழும்பு, தென்றலே! வா. கந்தப்பிசின்கள் வடியும்படி என் தோட்டத்தில் வீசு. என் நேசர் தம்முடைய தோட்டத்திற்கு வந்து, தமது அருமையான கனிகளைப் புசிப்பாராக" என உன்னதப்பாட்டு 4:16-ம் வசனத்தில், மணவாளியான சூலமித்தியாள் தன் நேசரிடத்தில் சாட்சி பகர்ந்தாள். இந்த சூலமித்தியாள், நம்மையும் நாம் கூடி வரும் சபையையும் குறிப்பிடுவதாயிருக்கிறது. இவளின் இவ்வித சாட்சி, முழு வேத வாக்கியங்களிலுமுள்ள எதைக் காட்டிலும்,* **நம் விசுவாசத்தை** *மிக அதிகமாய் பெலப்படுத்துவதாயிருக்கிறது.*

*மணவாட்டியாயிருந்த அவள் கூறியதைக் கேட்டீர்களா? "கொடிய விஷப்பனியை கொண்டு வரும் வாடைக்காற்றையும்! தெற்கிலிருந்து வீசும் வலிமையான காற்றையும் எழும்பி வரச்செய்து, தன் தோட்டத்தில் வீசும்படி தைரியமான அழைப்பு கொடுத்தாள்!! இரு திசையிலும் கலந்து வந்த காற்றானது தன் தோட்டம் முழுவதையும், சுகந்த வாசனையால் நிறைத்து விடும்! அப்போது, என்னுடைய நேசர் சுகந்த வாசனையால் ஈர்க்கப்பட்டு என் தோட்டத்திற்கு வந்து விடுவார்! அவர் வந்து, அவருக்காக நான் விளையச் செய்த அருமையான கனிகளைப் புசிப்பாராக" என மிகுந்த விசுவாசத்தோடு அழைத்தாள் (உன்.4:16).*

**பார்த்தீர்களா, மணவாளியாகிய அவள், தன் தோட்டத்திற்கு மணவாளன் எப்போது வந்தாலும் அவருக்குப் பிடித்தமான கனிகளை புசித்திட முடியும் என்பதில் அவ்வளவு உறுதியாயிருந்தாள்.**

*அவள் தோட்டத்திலிருந்த கனிகளின் விசேஷம் என்ன வென்றால் "அங்கு விளைந்த கனிகள் அனைத்தும்* **எப்போதும்** *இனிமையும், மதுரமுமாயிருக்கும்" என்பதுதான்! அதாவது, தன் தோட்டத்தைக் குறித்து அவள் உறுதிபட அறிந்திருந்தது என்ன வென்றால் 'கால சூழ்நிலை' எவ்வளவு கடினம் கொண்டதாயிருந் தாலும், வீசிடும் கொடிய காற்று தோட்டத்திலிருந்து எவ்வித துர்நாற்றத்தையும் எடுத்து வீச முடியாது! அவ்வளவு உறுதியுடன்*

அறிக்கை கூறியதற்கு காரணம் என்னவென்றால் 'தன் தோட்டத்தில் எவ்வித துர்நாற்றமுமில்லை' என்பதை நன்கு அறிந்திருந்தாள்.

உடனே, இந்த சாட்சியை கேட்ட மனுஷீக கிறிஸ்தவர்களின் ஆத்திரம் என்ன தெரியுமா? "இப்படிப் பேசுகிற இவள் பெருமை கொண்டவள்!" என்ற அதிரடி தீர்ப்புதான். இவர்களின் தீர்ப்பு சரிதான்..... ஏனென்றால், இவ்வித தீர்ப்பு கூறிய அவர்களிடம் 'விசுவாசம் கடுகளவுகூட இல்லை!' என்பதுதான். இதற்கு மாறாக, மணவாட்டியோ அந்த விசுவாசத்தை ஏராளமாய் வைத்திருந்தாள். ஜெயம் வருவதற்கு முன்பாகவே, கண்டிப்பாய் ஜெயித்திடுவோம்! என, யார் அவ்வளவு நிச்சயமாய் கூற முடியும்? அதற்கு 1யோவான் 5:4 விடை கூறுகிறது: "ஆம், விசுவாசத்தினால் அல்லது விசுவாசிக்கிற வனால் மாத்திரமே அவ்வாறு கூற முடியும்!" என நமக்கு எடுத்துரைக் கிறது. வடக்கிலிருந்து வீசியதும் தெற்கிலிருந்து வீசுவதுமான காற்றுகள்.... உபத்திரவங்கள்! விரோதங்கள்! முரண்பாடுகள்! முகாந்தரமற்ற தீய மன நோக்கங்கள்! ஆகிய கடின வாழ்க்கையே யாகும். இவை அனைத்தும் எழும்பி நின்று, உக்கிரத்துடன் என்மீது வீசினால் வீசட்டும்! **என, இவ்வுலகில் யார் தைரியத்தோடு கூற முடியும்?** இத்தனை தைரியத்தோடு இந்த மணவாட்டி கூறியதற்கு காரணம், அவள் நிறைவான, அசைக்க முடியாத நம்பிக்கையை தன் கர்த்தர் மீது வைத்திருந்தாள்! என்ற இரகசியமேயாகும். இது உண்மையிலும் உண்மை என வேதம் அவளை ஆதரிக்கிறது.

**1தீமோத்தேயு 1-ம் அதிகாரத்தில் கூறப்பட்ட வேத வாக்கியத்தின்படி "விசுவாசத்தினாலும் அன்பினாலும்" இந்த மணவாட்டி சகல சூழ்நிலைகளின் ஊடாக கடந்து சென்று ஜெயித்திடுவாள் என்ற திட நம்பிக்கையேயாகும்.**

இவள், தனக்கு ஏற்பட்ட ஒவ்வொரு சிறுசிறு சம்பவங்களிலும் அனைத்து தீமைக்கும் நன்மையை மாத்திரமே பதிலாய் செய்து ஜெயம் பெற்றாள்! அவள் ஒருபோதும் முறுமுறுத்ததுமில்லை. குறை கூறியதுமில்லை! அவள் ஒருபோதும் தைரியம் இழக்கவோ அல்லது சோர்ந்து போகவோ இல்லை!

இவ்வாறாக, அவள் தோட்டத்தின் அழகுள்ள நறுமணம் அவளின் சகல நற்குணங்களின் மூலமாக வெளிப்பட்டு மலர்ந்தது! இப்போது அந்த நறுமணம் தோட்டத்திற்குள் வீசிய வலிமையான காற்றினால், நறுமண வாசனை தோட்டத்தின் வளாகம் முழுவதும் பரவியது (2கொரி.2:14,15). இவ்வாறு காற்றிலே வெளிப்பட்ட நறுமண வாசனையை முகர்ந்த மணவாளன், தன் மணவாளியின்

*தோட்டத்திற்கு விரைந்து வந்து, தோட்டத்தின் நற்கனிகளை விருப்பத்துடன் புசித்தார்!*

*இந்த மணவாளி வைத்திருந்த அதிநிச்சயமான விசுவாசத்தை ரோமர் 15:29-ம் வசனத்தில் காணலாம்: "நான் உங்களிடத்தில் வரும்போது கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் சம்பூரணமான ஆசீர்வாதத்தோடே வருவேனென்று அறிந்திருக்கிறேன்" என்ற வசனமே அவளின் ஜீவியமாயிருந்தது. கிறிஸ்துவின் மணவாட்டிக்கு ஒப்பான ஸ்தானத்திலிருந்த பவுல் இவ்வித ஓர் தைரியமான அறிக்கையை பெருமையில் நிறைந்து கூறவில்லை! அதற்கு மாறாக விசுவாசத்தின் முடிவாய் சம்பவித்த 'ஜெயத்தையே' இங்கு அறிவித்தார்!*

*அப்படி அவர் சொல்ல முடியவில்லையென்றால் கிறிஸ்துவின் சபை எப்படி வெற்றி சிறக்கும்? விசுவாச வாழ்க்கையின் மேன்மையை 'பெருமை எனக்கூறி' உதாசினம் செய்பவர்கள் முடிவுபரியந்தம் தெய்வ அன்பில் நிலைத்திராதவர்கள்! ஆம், அவிசுவாசம் கொண்டவர்களே இப்படியெல்லாம் பேசித் திரிவார்கள்!*

*"சுய மகிமையில் சீழ் பிடிக்கும்!" என்பது பொதுவாக கூறப்படும் உண்மையான வாசகமேயாகும். இதை வேதம் கூறும்போது "அழிவு வரும் முன் மனுஷனுடைய இருதயம் இறுமாப்பாயிருக்கும்" என்றே கூறுகிறது (நீதி.18:12). ஆனால், இதன் மறுபக்கமாக பிலி.3:3-ம் வசனம் கூறுவதை கேளுங்கள். "மாம்சத்தின் மேல் நம்பிக்கையா யிராமல், ஆவியினாலே தேவனுக்கு ஆராதனை செய்து,* **கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மை பாராட்டுகிற** *நாமே விருத்தசேதனமுள்ளவர்கள்!" எனக்கூறும் இந்த வசனத்தை மனதில் கொள்ளுங்கள். இன்னும் அதிகமாய் "மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மை பாராட்ட வேண்டும்" என 1கொரி.1:30-ம் வசனம் எடுத்து கூறுவதையும் பாருங்கள்!*

*ஆகவே, ஒருவன் தன்னைக் குறித்து மகிமைப்படுத்தாமலும், அல்லது மேன்மை பாராட்டாமலிருப்பதும் தாழ்மையின் ரூபமாகும்! ஆகவே, ஒருவன் "கர்த்தரைக் குறித்து மேன்மைபாராட்ட முடியா திருந்தால்" அதற்கு பெயர் தாழ்மை அல்ல! அவன், விசுவாச தைரியம் இல்லாதவன்! விசுவாசத்திற்கும் அன்பிற்கும் வெற்றிக் கொடி உயர்த்தாதவன்! நீங்களோ அல்லது உங்கள் சபையோ, கிறிஸ்துவின் மணவாட்டியாய் திகழ வேண்டுமென்றால், உங்கள் அல்லது உங்கள் சபையின் விசுவாசத்திற்கும் அன்பிற்கும் வெற்றிக் கொடி ஏற்றுங்கள்!*

*– எலியாஸ் அஸ்லாக்ஸன்*

## உத்தம சபை ‘சிறிதாயினும்’ அங்குதான் எழுப்புதல் ஏற்படும்!

இயேசுவின் நாமத்தில், அதாவது **‘அவரது பிரசன்னத்தில்’** ஜனங்கள் எந்த இடத்தில் கூடி வந்தாலும், அந்த விசுவாசிகளின் ஐக்கியத்தை பரலோகத்தின் தேவன் அங்கீகரிப்பார். கிறிஸ்துவின் சரீரத்தில், அற்பமான கூடுகை என்பதே கிடையாது! இயேசுவின் பிரசன்னம் நிறைந்த தமது ஜனத்தின் ஸ்தலத்தை தேவன் வெகுவாய் கனம் பண்ணுகிறார்! ஓர் பிரபல்யமான சபை போதகரிடம், ஓர் இளம் போதகர் தன்னை அறிமுகப்படுத்தி “போதகர் அவர்களே, என்னை நீங்கள் தெரிந்திருக்க வாய்ப்பில்லை! ஏனெனில், நான் ஒரு சிறிய சபைக்கே போதகனாயிருக்கிறேன்” எனக் கூறினார். அதற்கு பதில் உரைத்த பெரிய சபையின் வயோதிப ஊழியர் “இளம் போதகரே, சிறிய சபைகள் என்று எதுவும் இல்லை! எல்லா சபையும் தேவனுடைய பார்வையில் ‘ஒரே அளவுகொண்ட’ சபைகளேயாகும்” என பதில் கூறினார்.

**விசுவாசிகளின் ஐக்கியம் சிறியதோ அல்லது பெரியதோ, அவர்கள் இயேசுவின் பிரசன்னத்தில் கூடி வந்து ஆராதித்தால், அந்த கூடுகை சிறிய சபையா? அல்லது பெரிய சபையா? என தேவன் வேறுபாடு பார்ப்பதில்லை!**

ஆனால், இன்றைய ஜனங்களோ சபையிலுள்ள மக்களின் எண்ணிக்கையை தொகையிட்டுப் பார்க்கிறார்கள். இதுபோன்ற ஜனங்கள், முற்றிலும் மாம்ஷீக சிந்தை கொண்டவர்கள், ஆவிக்குரியவர்கள் அல்ல! இயேசுவின் நாமத்தில், அவரது பிரசன்னத்தில் கூடி வரும் எந்த சபையையும் தேவன் கண்டு “எல்லா சபைகளும், என்னுடையவைகள்! நான் வழங்கும் அனைத்து ஈவுகளையும் இந்த ஒவ்வொரு சபையும் பெற்றுக்கொள்ள உரிமை இருக்கிறது!” என்றே தேவன் கூறுவார்.

இவ்வாறு நான் குறிப்பிடுவது, விசுவாசத்தை இழந்த, ஜீவனற்ற சபைகளை அல்லவே அல்ல!! தெய்வ பயமும், உண்மையும் கொண்ட விசுவாசிகளின் சபையையே நான் குறிப்பிடுகிறேன்! சபை சரித்திரத்தில் தொன்று தொட்டு வரும் தெய்வ பக்தி நிறைந்த ஆவிக்குரிய எல்லா தலைவர்கள் மீதும் நான் மிகப்பெரிய மதிப்பு வைத்திருக்கிறேன். அவர்கள் யாவரையும் நான் “தலைவர்களாய்” ஏறிட்டு பார்த்தாலும், அவர்கள் யாவரும் நம்மைப்போலவே ‘சாதாரண வேலைக் காரர்களாய்’ ஊழியம் செய்தவர்கள்!

*மார்டீன் லூத்தர் விதைத்தார்! ஜான் வெஸ்லி தண்ணீர் பாய்ச்சினார்! சார்லஸ் ஃபின்னி அறுவடைச் செய்தார்!* ..... ஆனால்,

இவர்கள் யாவரும், ஜீவனுள்ள **தேவனுக்கு முன்பாக 'அடிமைகளாகவே' ஊழியம் செய்தவர்கள்!**

இவ்வாறாக, நம்முடைய ஸ்தல சபையும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினால் தோற்றுவிக்கப்பட்டு, மறுபடியும் பிறந்த மாந்தர் களால் கூட்டப்பட்டிருக்க வேண்டும். அப்போது மாத்திரமே, கூடிவந்தவர்கள் கர்த்தருடைய பிரசன்னத்தை உணர்ந்து ஆராதிப்ப வர்களாய் இருப்பார்கள். அவர்களை நடத்தும் மேய்ப்பன், அபிஷேகத் தால் நிறைந்தவனும், எல்லா விதத்திலும் நல்ல மாதிரி உள்ளவனாய் இருக்க வேண்டும்! உத்தம தலைவர்களைக் கொண்டே சபையின் ஸ்திர தன்மை கணக்கிடப்படுகின்றது. அவ்வித சபை மிக சிறியதா யிருந்தாலும், அன்று அப்போஸ்தலர்கள் நாட்களில் செய்து முடித்த அதே கிரியைகளை, இந்த அற்பமான சிறிய சபைகளிலும் தேவன் நிச்சயமாய் செய்து முடிப்பார். அந்த சிறிய சபையின் வலிமை எல்லாம் "தேவன் எங்கள் நடுவில் வீற்றிருக்கிறார்!" என்ற வலிமையே ஆகும்.

ஓ, அந்த சபையா..... அங்கு இருப்பவர்களில் ஒரு சிலர் கெட்ட மாதிரி கொண்டவர்கள்! எனக் கூறுவதை ஜனங்கள் சகஜமாக்கி கொண்டார்கள். ஆனால் ஓர் உண்மை கேளுங்கள், மாய்மாலக் காரர்கள் எல்லா சபைகளிலும் இருப்பார்கள்! அவர்களின் நடத்தைகள் 'விசுவாசத்திற்கு ஏற்படும் இடையூறு' என்பதையும் நான் மறுக்க வில்லை! இன்னும் அதிகமாய் 'மற்றவர்களின் உத்தமத்தையும், அவர் களின் நடத்தை மட்டுப்படுத்தும்' என்பதையும் நான் மறுக்கவில்லை!!

**ஆனால் "ஒரு கெட்ட மாதிரி யூதாஸினிமித்தம்" மீதமுள்ள 11 அப்போஸ் தலர்கள் தரம் இழந்தார்களா? சில ஆயிரம் பேர்கள் கொண்ட பேதுருவின் சபையில் "ஒரு அனனியாள் சப்பீராள் தம்பதியினரால்" சபையின் தரம் குறைந்ததாக கணக்கிடப்படுமோ? அல்லது உலக சினேகம் கொண்ட "ஒரு தேமாவினிமித்தம்" பவுலின் ஊழியங்களை மாசு கற்பிக்கலாகுமோ? நிச்சயமாய் இல்லை!**

பரிசுத்தவான்கள் கூடும் சபைகளில், ஒரு சிலர் கெட்ட மாதிரிகள் அவ்வப்போது தோன்றுவதால், அந்த தூய சபையை குறைந்த மதிப்பீடு வைத்து பார்ப்பது உகந்த செயல் அல்ல. அவ்வித செயலை நீங்கள் செய்தால், வெகு சீக்கிரத்தில் உங்கள் சபைகளில் 'நிறைய கெட்ட மாதிரிகள்' முளைத்து வருவதைக் காண்பீர்கள்!? தேவன் பரிசுத்தப் படுத்தி வரும் ஒரு சபையை 'அசுத்தம்' எனக்கூற பயந்திருப்போமாக!

உண்மையான ஓர் சபையின் வலிமை, அங்கு முன்னின்று நடத்தும் தலைவர்களைச் சார்ந்ததேயாகும். அவர்களின் உத்தம முன் மாதிரி, சபையில் உண்மையுள்ள விசுவாசிகளிடத்தில் ஓர் மிகப்பெரிய

*ஆவிக்குரிய எழுப்புதலை நிச்சயமாய் கொண்டு வரும். மிக விசாலமான வாசலை முன் வைத்து உலக சமரசத்திற்கும், அதின் மோகத்திற்கும் விட்டுக் கொடுத்து வாழும் ஒரு பெரிய சபைக்கு "இந்த தூய்மையான எழுப்புதல்" எக்காலத்தும் வராது! ஆனால், "இந்த உலகத்தில் உள்ள வேறு எதைக் காட்டிலும் தேவனுடைய பிரசன்னமும், அவரது ஆசீர்வாதமுமே மிக மேலானது" என வாஞ்சிக்கும் 'அந்த சிறிய சபையில்' தேவன் தன் எழுப்புதலை கட்டளையிடுவார்!*

**நல்ல மாதிரி கொண்ட தலைவனும்.... அவரை அண்டியுள்ள தாழ்மையும், உண்மையும், பக்தியும் நிறைந்த விசுவாசிகளைக் கொண்ட ஒரு ஸ்தல சபை எங்கிருந்தாலும், அவர்கள் 'சிறுமந்தையாய்' இருந்தாலும், தேவன் தம் எழுப்புதலை அங்கு கட்டளையிடுவார்!**

*அவர் வழங்கும் உன்னத மேன்மைகளை இன்றைய சபைகள் இழந்து நிற்பதே, சபைக்கு ஏற்பட்ட துயரம். இந்த துயரத்தை மாற்றி அமைக்கும் 'நல்ல மாதிரி கொண்ட' தலைவர்களை நம் ஸ்தல சபையில்..... நம் தேசத்தில் தேவன் எழுப்புவாராக!*

*– A.W. டோசர்*

---

## பரிசுத்தாவியின் நிறைவில் 'ஜீவிய மாற்றங்கள்' ருசித்தேன்!

*நான் பிரான்ஸ் தேசத்தைவிட்டு ஜெனிவா சென்றுவிட்டதை கேள்விப்பட்டதை அறிந்த என் உறைவிடத்தார், பல்வேறு குற்றசாட்டுகளை என்மீது வசை பாடினார்கள் என நான் கேள்விப் பட்டேன். அறியாமை கொண்ட ஜனங்கள் மாத்திரமல்ல, ஓரளவு பக்தி யான வரிசையிலிருந்த மக்கள்கூட அச்சந்தர்ப்பத்தில் என்னை குற்றம் சாட்டினார்கள்! மேலும், மரித்த என் மாமியார் குடும்பத்தாரிடம் என் இளைய மகனை ஒப்புவித்து வந்திருந்தேன். அவனை அவர்கள் பராமரித்த விதமும் சரியாயில்லை எனவும் கேள்விப்பட்டேன்.*

**இவ்வாறெல்லாம், கடிதங்கள் மூலமாய் நான் கேள்விப்பட்ட அனைத்திற்கும் பரிசுத்தாவியானவர் எனக்கு அருளிய வாக்கின்படி பதில் எழுதினேன். நான் எழுதிய பதில்கள் அத்தனையும் நீதியுள்ளதாய் இருந்ததைக் கண்டேன். பரிசுத்தாவியானவர் அப்படியொரு ஆறுதலை 'என் பதில் கடிதம் மூலமாக' தந்திருந்தார்!**

*நான் கடிதம் எழுதிய ஒருசில வாரங்களுக்குள் 'தீமையாய் பரப்பியிருந்த அனைத்தும்' நலமாய் மாறிவிட்டதென தகவல் கிடைக்கப்பெற்று மகிழ்ச்சியடைந்தேன். அங்கிருந்த தந்தை-லா-மோத்தே, என்னைக் குறித்த காரியங்களை விசாரித்து நீதியான*

*சமாதானத்தை அங்கு நிலைநாட்டினார். ஆனால் கொஞ்ச காலத்திற்குள் தந்தை-லா-மோத்தே அவர்களின் செயல்பாடுகளில் மாற்றங்கள் ஏற்பட்டது. அவர் எனக்காக செய்து முடித்த நலமான காரியங்களுக்குப் பிறகு, என் பழைய இளவரச அந்தஸ்தின்படி அவருக்கு மாதந்தோறும் உதவித்தொகை அனுப்புவேன் என எதிர்பார்த்து ஏமாற்றம் அடைந்தார் என கேள்விப்பட்டு வருந்தினேன். அதே வேளையில் சிஸ்டர் கார்னியர் அவர்களும் ஏதோ என்மீது பிடிக்காத மனநிலை கொண்டு எனக்கு விரோதம் செய்கிறார்கள் என அறிந்து வருந்தினேன்.*

*இதுபோன்ற காலநிலையில், உணவும், உறக்கமும் எனக்கு குறைவுபட்டது. என்னை தங்க வைத்திருந்த குடியிருப்பில் வழங்கப்பட்ட உணவில் அடிக்கடி புழுக்கள் காணப்பட்டது. மேலும் அந்த நாட்டின் உஷ்ணத்தின் காரணமாகவும், நீண்ட நேரம் உணவு வெளியில் வைக்கப்பட்டிருந்த காரணத்தினாலும் கெட்டுப்போன உணவு வழங்கப்பட்டது. என் இளவரச குடியிருப்பில் எதையெல்லாம் சுகாதாரமற்றது என விலக்கிவைத்து வாழ்ந்தேனோ, அவையெல்லாம் எனக்கு இப்போது அன்றாட உணவாய் தரப்பட்டது! இருப்பினும் நான் கர்த்தரோடு நெருங்கி வாழ்ந்தபடியால், ருசியற்ற உணவும் என் உள்ளத்தின் அமைதியை பாதிக்கவில்லை!*

**நான் கர்த்தருக்குள் எவைகளையெல்லாம் நஷ்டமென்று இழந்தேனோ, அன்று அவ்வாறு இழந்த செயல் மதியீனமாய் கருதப்பட்டது! ஆனால் இன்றோ "சகலத்தையும் நஷ்டமென்று விட்டுவிட்ட செயல்" சொல்லி முடியாத திவ்விய நன்மைகளை எனக்கு வழங்கியதைக் கண்டேன்.**

*இந்த ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு நிலை, எனக்கே மிகுந்த பிரமிப்பாயிருந்தது! 'என்னால் ஏற்றுக்கொள்ள முடியாத நிலை' என, எதுவும் இல்லாதிருப்பதை நான் இப்போது கண்டு அறிந்து கொண்டேன்! அல்லது 'என்னால் மேற்கொள்ள முடியாதது என' எதுவும் எனக்கு இப்போது இல்லை! எனவும் கண்டறிந்து பரவசம் கொண்டேன். என் அரசகுல தராதரத்தை அறிந்த சிலர், இப்போது நான் வாழும் தாழ்ந்த நிலையைக் கண்டு 'இது எப்படி சாத்தியம்?' என கூறி ஆச்சரியப்பட்டார்கள். உண்மை என்னவென்றால் "***என்னால் கூடும் என்ற திறன், என்னிடம் ஏதுமில்லை!*** *ஆனால் 'தேவனுக்குள்' என்னுடைய ஆவி, இதுவரை இல்லாத திவ்விய பண்புகளை நான் பெற்றுக் கொள்ளும்படி செய்தது!" இதுதான் உண்மை!*

*பரிசுத்தாவியை அப்போஸ்தலர்கள் பெற்றபின்பு அடைந்த மாற்றங்களையே, இப்போது நானும்* **பரிசுத்தாவியின் நிறைவில் மாற்றம்**

**பெற்றதை அனுபவித்தேன்!** *அந்த மாற்றத்தின் வளர்ச்சியில் 'தேவபக்திக்கு உகந்த வாழ்க்கை வாழ' அனைத்து பெலனையும் நான் பெற்று அனுப விப்பதை உணர்ந்தேன். இந்த வளர்ச்சியில் ஒரு நன்மையும் எனக்குள் குறைவுபடாதிருந்ததைக் கண்டேன்! நித்திய ஞான சம்பந்தராகிய இயேசு கிறிஸ்து என் ஆத்துமாவில் உருவாகிய நிலையில் 'அவருக்குள் சகல நன்மைகளும்' தொடர்பு ஏற்படுவதை அனுபவித்தேன்!*

*நான் ஜெக்ஸ்* (Gex) *ஸ்தலத்திற்கு வந்தபிறகு, அவ்வப்போது தொடர்பு கொண்ட ஜெனிவா பிஷப் என்னை நேரில் காணவந்தார். அவர் கூறியது என்னவென்றால் "நீங்கள் எப்போதெல்லாம் என்னிடம் பேசினீர்களோ, அவைகள் என் மனதிற்குள் சென்றதைக் கண்டேன்! மேலும், என் உள்ளம் அவைகளை சத்தியமென ஏற்றுகொண்டதையும் உணர்ந்தேன்! பிறகு, தேவன் என்னிடம் எவைகளை எதிர்பார்க்கிறார் என்பதை தெளிவாய் உணர்த்துவிக்கப்பட்டு திருந்தி வாழ்கிறேன்" என அவர் கூறிய அறிக்கை என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. நானோ, ஒரு பேதை! எனக்குள் வாசம் செய்த சத்திய ஆவியானவர் 'ஜெனிவா பிஷப்பிடம்' இடைபட்டார் என்ற உண்மையை மாத்திரம் அறிந்து கொண்டேன்.*

*தான் உணர்த்துவிக்கப்பட்டதை பிஷப் அவர்கள் என்னிடம் கூறி முடித்தபின்பு, "தந்தை-லா-கோம்பே அவர்களுக்கு" நீங்கள் மேலாளராக* (Director) *பணி ஏற்றுக்கொள்வது நலம் என்று நான் எண்ணுகிறேன்!" எனக் கூறினார். அவர் கூறிய செய்தி, எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை தந்தது. ஏனெனில், தந்தை-லா-கோம்பே தேவனால் ஒளியேற்றப்பட்டவர்! தேவனோடு நடந்து செல்லும் அந்தரங்க பாதையை அறிந்தவர்! ஆத்துமாக்களை, தான் பெற்ற தாலந்துகளைக் கொண்டு, தேவனோடு ஒப்புரவாகச் செய்யும் வரம் பெற்றவர்! ஆகவேதான், பிஷப் அவர்கள், அவருக்குத் தந்த பொறுப்பை எண்ணி மகிழ்ச்சியடைந்தேன். தந்தை-லா-கோம்பே அவர்கள், தன் அதிகார பொறுப்பை, தனக்கு அருளப்பட்ட கிருபையைக் கொண்டு, தெய்வ அன்போடு செயல்படுவார்! என்ற நிச்சயம் எனக்குள் இருந்தது!*

*– மேடம் குயான்*

---

## 'நாம்' வெளியேறி 'அவரது கிரியை' நடப்பதே இளைப்பாறுதல்!

**மி***க உன்னதமான ஓர் திவ்விய சத்தியம் உண்டு! அதை ஏன் அநேக கிறிஸ்தவர்கள் அறிந்து வாழவில்லை என்பதும் புரியவில்லை! உண்மை என்னவென்றால், அந்த உன்னத சத்தியம் நமக்குள் எப்போதும் தங்கியிருக்கவேண்டிய மகா வலிமையான சத்தியமாகும்.*

*செவிமடுத்து கேளுங்கள்: "விசுவாசித்தவர்களாகிய நாமும் அந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம்...* **அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தவன்,** *தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்தது போல, தானும் தன் கிரியைகளை முடித்து ஓய்ந்திருப்பான்" (எபி.4:3,10). இந்த வசனங்களில் கூறப்படும் "ஆசீர்வதிக்கப்பட்ட இளைப்பாறுதலில்" நாம் யாவரும் பிரவேசிக்கவே தேவன் அதிகமாய் விரும்புகிறார். நாம் இரட்சிக்கப்படும்போது அடைகிற இளைப் பாறுதல் ஒன்று உண்டு! சரீர வேதனை நீங்கும்போது அடைந்திடும் இளைப்பாறுதல் ஒன்று உண்டு! பாவம் செய்யாதிருக்கும்போது அனுபவிக்கும் இளைப்பாறுதல் ஒன்று உண்டு! இவைகள் எல்லா வற்றிற்கும் மேலாக "***நம் சொந்த கிரியைகளை விட்டு ஓய்ந்திருக்கும் இளைப்பாறுதல்!***"இதுவே பிரதானமாய் தேவன் நம்மிடத்தில் விரும்புகிறார் (எபிரெயர் 4:10). நீங்கள் தேவனால் முழுவதும் ஆட்கொள்ளப்படும்போது 'நீங்கள் உங்கள் சொந்தமல்ல என்பதை அறிந்திருப்பீர்கள்' இங்குதான் பரிசுத்தாவியானவர் நமக்குள் வல்லமையாய் கிரியை செய்யத் துவங்குகிறார்!*

*இன்றும், திரளான கிறிஸ்தவர்கள் தங்கள் ஜீவியத்தின் பல விஷயத்தில் இளைப்பாறுதலை இழந்து வாழுகிறார்கள். தேவன் நம்மில் விரும்புவதெல்லாம் நம்முடைய சொந்த கிரியைகளிலிருந்து நாம் ஓய்ந்திருக்க வேண்டும்! அதுபோலவே....*

> **நம்முடைய சொந்த திட்டங்கள், மனுஷீக முயற்சிகள், சுயமான தீர்மானங்கள் ஆகிய 'இளைப்பாறுதலற்ற இவை அனைத்தும்' நமக்குள் கிரியை செய்ய விரும்பும் தேவனுடைய வல்லமையை வெகுவாய் பாதித்து விடுகிறது! தேவனோ நம் முழுமையையும் தம்மைக் கொண்டே நிரப்ப விரும்புகிறார். இதிலிருந்து தோன்றும் இனிமையான விளைவுதான் 'நாம்' வெளியேற்றப்படுகிறோம்!**

*இந்த ஆசீர்வதிக்கப்பட்ட நிலையில் தேவனுடைய திட்டம்! தேவனுடைய வாசஸ்தலம்! தேவனுடைய ஞானம்! நம்மை முழுவதுமாய் ஆக்கிரமிக்கிறது. இந்த ஆசீர்வதிக்கப்பட்ட நிலையை ஒப்பிட்டுக் கூறவேண்டுமென்றால் "கர்த்தத்துவம் அவருடைய தோளின் மேலிருக்கிறது" (ஏசாயா 9:6) என்ற வசனத்தை தாராளமாய் ஒப்பிடலாம். பேதுருவிடம் இயேசு கூறிய மிக ஆச்சரியமான வசனத்தை உங்கள் மனதில் எப்போதும் வைத்து வையுங்கள்: "நீ இளவயதுள்ளவனாயிருந்தபோது, உன்னை நீயே அரைகட்டிக் கொண்டு, உனக்கு இஷ்டமான இடங்களிலே நடந்து திரிந்தாய்! நீ முதிர்வயதுள்ளவனாகும்போது உன் கைகளை நீட்டுவாய்,*

வேறொருவன் உன் அரையை கட்டி, உனக்கு இஷ்டமில்லாத இடத்துக்கு உன்னை கொண்டு போவான்" என இயேசு பேதுருவிடம் கூறினார் (யோவான் 21:18). இந்த வசனத்திற்கு ஒப்பாகவே பவுலுக்கு சம்பவித்தது, அப்போஸ்தலர் 20:22- ம் வசனத்தில் "இப்பொழுதும் நான் ஆவியிலே கட்டுண்டவனாய் எருசலேமுக்கு போகிறேன்! அங்கே எனக்கு நேரிடும் காரியங்களை நான் அறியேன்" எனக் கூறினார். எது நேரிடவேண்டும்? எதை செயல்படுத்தவேண்டும்? என்பவைகளை பவுல் அறியவில்லை. ஏனென்றால், அவைகள் அனைத்தையும் பரிசுத்தாவியானவரே நடத்தி, நேரிடச் செய்கிறார்! இன்னும் அதிகமாய் அப்போஸ்தலர் 15, 16-ம் அதிகாரங்களை நிதானமாய் வாசித்துப் பாருங்கள். அங்கு விளங்கப்படும் அதிசயம் இதுதான்: முற்றிலும் பரிசுத்தாவியின் வல்லமையினால் மாத்திரமே பவுல், சீலா, பர்னபா, மாற்கு, யோவான் மற்றும் பேதுரு ஆகிய அனைத்து தாசர்களும் "தங்கள் ஜீவியத்திற்குரிய தேவனுடைய திட்டங்களை" கற்று அறிந்து கொண்டார்கள். அந்த திட்டங்கள் எப்படிப்பட்ட தன்மை கொண்டது? இவர்கள் யாவருக்கும், அவர்களைக் காட்டிலும் 'மகா வலிமை கொண்ட ஒருவர்' அவர்கள் கரங்களைப் பிடித்திருந்தார்! அவர்களுக்குரியதை அவரே தெரிந்து கொண்டார்!... ஏன், அவர்கள் பேசும் வார்த்தைகளையும் அவர்கள் சிந்தைகளையும் கூட அவரே ஆட்கொண்டு நடத்தினார்!

**அதுஏனென்றால், அவர்களின் முழு ஜீவியமும் பரிசுத்தாவியின் திவ்வியம் நிறைந்ததாய் இருந்திட அவர்கள் விரும்பினார்கள். அவர்கள் என்ன செய்ய வேண்டும்? எந்த சரியான நேரத்தில் செய்ய வேண்டும்? ஆகிய அனைத்திற்கும் பரிசுத்தாவியின் நடத்துதலை சார்ந்து கொண்டார்கள்! ஆ, அதுவே அவர்கள் அனுபவித்த தேவ இளைப்பாறுதல்!!**

(அப்.1:28; அப்.16:1-10 ஆகிய வசனங்களை வாசித்துப் பாருங்கள்).

இந்த செய்தியில் நீங்கள் அறியும்படி அப்போஸ்தலர் 16:6-ம் வசனத்தின் அதிசயத்தைப் பாருங்கள்: "அவர்கள் பிரிகியா, கலாத்தியா, நாடுகளைக் கடந்துபோனபோது, **ஆசியாவிலே வசனத்தை சொல்லாதபடிக்கு பரிசுத்தாவியினாலே தடைபண்ணப்பட்டார்கள்!**" என வாசிக்கிறோம். இதை வாசிக்கும் நீங்கள் "என்ன, மற்ற எல்லா இடங்களையும் போல் ஆசியா நாட்டிற்கும் பரிசுத்தாவியானவர் தேவையில்லையா?" என கேட்கலாம். அங்கும், பரிசுத்தாவியானவர் நிச்சயம் தேவைதான்! ஆனால் பரிசுத்தாவியானவர் ஒருவர் மாத்திரமே "**பரிசுத்தாவியை பெற யார் ஆயத்தமாயிருக்கிறார்கள்?**" என்பதை அறிவார்! தேவை அதிகமாயிருந்தும் ஜனங்கள் பெற்றுகொள்ள ஆயத்த

*மில்லாமல் இருக்கலாம். உங்களுக்கு ஏராளமான தேவைகள் இருக்கலாம்... ஆனால், அவைகளை நீங்கள் வாங்குவதற்கு ஆயத்த மில்லையென்றால், உங்களால் பெற்றுகொள்ள முடியாதல்லவா? ஆகவே "பரிசுத்தாவியைப் பெற, பசியும் தாகமுமாயிருப்பதே" ஆயத்தநிலையாகும்.*

**தேவன் எனக்குத் தர விரும்பியதை நான் பெற்றுக்கொள்ளும்வரை என் தாகம் தீராது எனக் கூறும் யாராயிருந்தாலும், தேவன் அங்கு வருவார்! அவர்கள் பெற வேண்டியதை நிச்சயம் தருவார்!**

இப்போது, கீழ்காணும் வசனங்களை நீங்கள் வாசித்தால் புரிந்து கொள்வீர்கள். "*மீசியா தேசமட்டும் வந்து, பித்தினியா நாட்டுக்குப் போகப் பிரயத்தனம் பண்ணினார்கள், ஆவியானவரோ அவர்களைப் போகவொட்டாதிருந்தார். அப்பொழுது அவர்கள் மீசியா பக்கமாய் போய், துரோவாவுக்கு வந்தார்கள். அங்கே இராத்திரியிலே பவுலுக்கு ஒரு தரிசனம் உண்டாயிற்று. அதென்னவெனில், மக்கெதொனியா தேசத்தான் ஒருவன் வந்து நின்று:* **நீர் மக்கெதொனியாவிற்கு வந்து எங்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று** *தன்னை வேண்டிக் கொண்டதாக இருந்தது! (அப்.16:7-9).* மக்கெதொனியா மக்களின் '*பசியையும் தாகத்தையும்' பார்த்தீர்களா? ஆகவேதான் பரிசுத்தாவியானவர் தன் தாசர்களை அங்கு நடத்திச் சென்றார்! பிரியமானவர்களே, இனிமுதல், பரிசுத்தாவியானவரின் கிரியைக்கு 'யாதொரு கேள்வியும் கேட்காமல்' கீழ்ப்படியுங்கள்! தேவனுடைய கிரியை நடக்குமிடமே உங்களின் ஆசீர்வதிக்கப்பட்ட இளைப்பாறுதல்! ஆமென்.*

*– ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்*

---

## 'தன்னை ஒரு பொருட்டென்று' எண்ணாதவர் நிலைத்திருப்பார்கள்!

*தனது ஒன்றுமில்லாமையை 'உள்ளபடி உணராத' அனேக விசுவாசிகளே இன்று கிறிஸ்துவுக்குள் நிலைத்து வாழவில்லை! "ஒருவன் தான் ஒன்றுமில்லாதிருந்தும் தன்னை ஒரு பொருட்டென்று எண்ணினால் தன்னைத்தானே வஞ்சிக்கிறவனாவான்" (கலா.6:3).* மேலும், "**எங்களால் ஏதாகிலும் ஆகும்** என்பதுபோல் ஒன்றை யோசிக்கிறதற்கு நாங்கள் எங்களாலே தகுதியுள்ளவர்கள் அல்ல; *எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது" (2கொரி.3:5) ஆகிய இந்த 2- வசனங்களே நிலைத்திருக்கும் கிறிஸ்தவனின் இரகசியம்! எல்லாரைப் பார்க்கிலும் அதிகமாய் பிரயாசப்பட்ட அப்போஸ்தலன் தம்மைக் குறித்துச் சொல்லக்கூடியது இவ்வளவுதான்! தான் ஒன்றுமில்லாத கொடியென்றும், கிறிஸ்துவாகிய செடியில் அவர்*

*நிலைத்திருந்தால் மாத்திரமே, உன்னதமான ஜீவியமும், கனிகள் நிறைந்த உத்தம ஊழியமும் தன்னில் காணப்பட முடியும் என, அனுபவ சாட்சியாகக் கூறுகிறார். பெலவீனமான கொடியின் ஜீவிய இரகசியம் அதுதான்!*

**தான் ஒன்றுமில்லை, தன்னால் ஒன்றும் ஆகிறதில்லை..... தான் வளர்ந்து கனிகொடுப்பதற்கு ஒரே காரணம், தான் இடைவிடாமல் சார்ந்து கொண்டு, நிலைத்திருக்கும் செடியினால் என்பது அந்த கொடிக்குத் தெரியும். நாம் ஒன்றுமில்லாதவர்களாகும் போது, கிறிஸ்து நமக்கு எல்லாமுமாகிறார்! கொடியின் பாக்கியமான ஜீவியம் அதுவே!**

*அது பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளதாயிருப்பதின் ஒரே இரகசியம் அதுதான். ஆண்டவர் நம்மை இந்த ஆசீர்வாதமான ஜீவியத்திற்கே அழைக்கிறார். அவரே நம்மைத் தமது செடியின் ஜீவனால் நிரப்புவதினால், நாம் கனிகொடுக்கவேண்டுமென்று இயேசு விரும்பி எதிர்பார்ப்பது, ஏற்புடையதுதானே! நமது இருதயம், அவருடைய இருதயத்தோடு இணைக்கப்படுவதால் "***அவரது, அதே ஜீவியமே***" நம்மில் காணப்படும்! அவர் எப்படி ஊழியம் செய்தாரோ, அதே தரத்தில் நாமும் ஊழியம் செய்திட முடியும்!*

*ஆகவே, கிறிஸ்துவில் நிலைத்திராத ஜீவியமும் ஊழியமும் செடியிலிருந்து விலகிய கொடிபோல வீணாகுமென்பது நிச்சயம்! அப்படியானால் நிலைத்திருக்கும்படி நாம் செய்ய வேண்டியதென்ன? இந்த உவமையை வாசிக்கும்போதே சில குறிப்புகளும் காணப்படுகின்றன: 'என்னில் நிலைத்திருங்கள்' என்று ஆண்டவர் திரும்பத் திரும்ப கூறினார். நாம் குளிரில்போய் வெகுநேரம் உட்கார்ந்திருந்தால் நமது தேகம் குளிரால் நடுங்கும்! நாம் வெயிலில் வெகுநேரமிருந்தால் நமது தேகம் உஷ்ணமேறிக் கொதிக்கும்! இதுபோலவே, நாம் கிறிஸ்துவின் சமூகத்தில் அமரிக்கையாய் காத்திருக்கும்போது அவருடைய திவ்விய சமூகம் நம்மை ஆண்டுகொள்ளுகிறது! அவருடைய பாதபடியில் எவ்வளவுநேரம் செலவழிக்கிறோமோ அவ்வளவுக்கு அவருடைய சாயலுக்கொப்பாக மாறுகிறோம். "அவரை நோக்கிப் பார்த்து பிரகாசமடைந்தார்கள்". "ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப் படுகிறோம்" (2கொரி.3:18). ஆம், அவரது சமூகத்தில் வெளிச்சம் பெற்று நமது பாவங்கள் நீங்கி கழுவப்படுகிறோம். அவரது சமாதானம் நம்மை நிரப்புகிறது! அவர் சாயல் நமக்கு கிடைக்கிறது! அவரில் நிலைத்திருந்து ஜீவிப்பதற்கு, ***அவர் சமூகத்தில் காத்திருந்து ஜெபிப்பது*** அவசியம் என்பதை உணர்கிறோம்!*

அதுபோலவே, “என் அன்பில் நிலைத்திருங்கள்” என்கிறார். நமக்குள் இருவர் சிநேகமாகி, அவர்கள் சிநேகம் வரவர வளர்ந்து பூரணப்படுவதுபோல், கிறிஸ்துவின்மீதுள்ள நமது அன்பு வரவர வளர வேண்டும். ஆகவேதான் “**என் அன்பு**” என்றே குறிப்பிட்டார்! இயல்பாய் நமக்குள் அன்பில்லை! நாம் யாதொரு பொருளின் அருமையை அறியுமுன் அதை விரும்புகிறதில்லை. அதன் பிரயோ ஜனத்தை அறிந்தபின், அதைச் சொந்தமாக்கிக்கொள்ள விரும்பு கிறோம். கர்த்தராகிய இயேசுவின் அதிசயமான அன்பை உணரும் போது அவரை நேசிக்காமலிருக்க முடியாது! அந்த அன்பை நாம் அறிந்துகொள்ள வேண்டுமென்றே ஆண்டவர் இயேசு விரும்புகிறார்.

**அவரோடு பேசாமலும், அவரோடு பழகாமலும், அவர் நமக்காகச் செய்திருக்கிற காரியங்களை அறியாமலும் இருந்தால், அவரிடத்தில் அன்பாயிருப்பது எப்படி?**

அநேக உலக அன்பின் காரியங்கள் நமது இருதயத்தை ஆண்டு கொண்டிருக்கும் வரையில், அவரது அன்பின் சாரம் நமது இருதயத்துக்குள் வர ஏதுவில்லை! அவரது அன்பு, நமது உள்ளத்தில் பிரவேசிக்கிறவரையில் நாம் அவரில் நிலைத்திருப்பதும்கூடாது. ஆகையால், அவர் அன்பைப்பெற்று, அவ்வன்பில் நிலைத்திருக்க வேண்டுமென்றால், நமது இருதயத்தை அவருக்கு முன்பாக மறைக்காமல் அப்படியே ஊற்றிவிட வேண்டும். அவர் தமது ஆவியினால் உலகமாயம் அகற்றி, தேவ அன்பை நமது இருதயத்தில் ஊற்றுவார் (ரோமர் 5:5). கபடும் மாயமுமான இருதயத்தில் அவருடைய அன்பு வெளிப்படுவதில்லை. இந்த மாய உலகத்தில்கூட திறந்த வெளிப்படை இருதயமுள்ளவர்களே, அன்பான சிநேகிதர்கள். **ஒருவரிடத்தில் கபடும் மறைவும் காணப்பட்டால் அந்த சிநேகம் முறிந்து போகும்.** அருமை இரட்சகர் என்றென்றும் திறந்த இருதயமுள்ள அன்பன்! அவர் அன்பைப் பெற்றுக்கொள்வதற்கும், அந்த அன்பில் நிலைத்திருப்பதற்கும் நமக்கும் கபடற்ற திறந்த இருதயம் வேண்டும். அவருக்கு ஒன்றையும் நாம் மறைக்கக்கூடாது. அவருக்கு எல்லாம் தெரியும்..... இந்த நிலையில்தான், ஆண்டவர் நம்மை சுத்திகரித்து நம்மை தமக்கென சுதந்தரிக்கிறார்!

மேலும், “என் வார்த்தைகள் உங்களில் நிலைத்திருக்க வேண்டும்” என்கிறார் இயேசு! இது கீழ்ப்படிதலின் ஜீவியம். தம்மையே அதற்கு மாதிரியாகச் சொன்னார். “நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என் அன்பிலே

*நிலைத்திருப்பீர்கள்" என்றார். தேவ விருப்பத்துக்கு விரோதமாய் நடந்து அவர் அன்பில் நாம் எப்படி நிலைத்திருக்கக்கூடும்?* **அவர் சொற்படி நடப்பதே அவர் பேரிலுள்ள அன்புக்கு அடையாளம்!**

*இவ்வாறு, நாம் பூரணமாய் அவருக்கு நம்மை கையளித்து, இடைவிடாமல் அவரில் நிலைத்திருந்து ஜீவிக்கும்போது: இயேசு குறிப்பிட்ட கனியும், அதிக கனிகளும், மிகுந்த கனிகளும், நிலைத்திருக்கும் கனிகளும் நம்மில் உண்டாகும்! கொடியானது செடியில் மாரிகாலத்திலும், கோடை காலத்திலும், குளிர் காலத்திலும், காற்றுக் காலத்திலும்.... எப்பொழுதும், இரவும் பகலும், நீங்காமல் நிலைத்திருந்து கனிகொடுப்பதுபோல, நாமும் இடைவிடாமல் நிலைத்திருப்போமாக! இவ்வாறு நிலைத்திருக்கும் ஜீவியத்தைக் கெடுக்கும்படி எத்தனையோ சோதனைகள் நமக்கு நேரிடும். நாம் கலங்கிச் சோர்ந்துபோக வேண்டியதில்லை.*

**பிதாவாகிய தோட்டக்காரர் நமக்கு உண்டு. அவர் கையிலிருந்து நம்மைப் பிரிக்க ஒருவராலும் முடியாது!**

*மேலும், நமது இரட்சகர் தன் பிதாவைப் பார்த்து: "பிதாவே, நீர் இவர்களை எனக்குத் தந்தீர். நீர் இவர்களைத் தீமையிலிருந்து காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்" என்று ஜெபித்தார். அந்த ஜெபம் பிதாவினால் கேட்கப்பட்டிருக்கிறது! கர்த்தர் தமது கொடிகளை ஒருக்காலும் இழந்துபோகமாட்டார். இந்த பாக்கியமான கொடியின் ஜீவியத்தில் நாம் பிரவேசித்து, மிகுந்த கனிகளைக் கொடுப்பதால் நம்மைச் சுற்றியுள்ள உலகம் ஆசீர்வதிக்கப்படும்! பிதா மகிமைப்படுவார்! இரட்சகர் நம்மைக் கொடிகளாகத் தெரிந்து கொண்ட நோக்கமும் நிறைவேறும்!! அல்லேலூயா.*

*– பரமானந்தம் ஐயர்*

---

## உடல் ஊனமா? எல்லோருக்கும் 'தேவ நோக்கம்' உண்டு!

*குருடர்கள் வாசிக்க உதவும் "பிரெய்லி கல்வியை"* (Braille System) *கண்டுபிடித்தவர் Dr.மூன் அவர்கள்! ஆனால், அவர் யார் தெரியுமா? தன் இருகண் பார்வையிழந்தவர்! இருப்பினும், அவர் பிறக்கும்போதே குருடராய் பிறக்கவில்லை. ஆம், ஓர் வாலிபனாய் இருந்தபோதுதான் தன் இரு கண்பார்வையையும் இழந்தார். "இப்படி அசம்பாவிதம் நடந்து விட்டதே" என அவர் ஒருபோதும் தேவனிடத்தில் கேள்வி கேட்டதேயில்லை. இந்த உலகமே சூனியமாகி இருண்டுபோன நிலையில், யாதொரு முறுமுறுப்பும் அவரிடத்தில் காணப்பட்டதேயில்லை. "ஆண்டவரே, நான் குருடாய் இருப்பதற்*

காக உம்மை நான் ஸ்தோத்தரிக்கிறேன்!" என்றே அவர் தேவனிடம் ஜெபித்தார்.

**தனக்கு கண்பார்வை மீண்டும் வரவேண்டும் என, அவர் ஆரம்பத்தில் ஜெபித்தது உண்மைதான்! ஆனால் "இனி பார்வை கிடைக்காது" என்பதை உறுதியாய் அறிந்தவுடன், தேவனை நோக்கி "ஆண்டவரே, எனக்குள்ள தாலந்துகளை பயன்படுத்தி உம்மை மகிமைப்படுத்த எனக்கு அருள் புரியும்!" என்றே ஊக்கமாய் ஜெபித்தார்.**

Dr.மூன் ஜெபத்தை தேவன் கேட்டார்! கண்பார்வை இழந்த குருடர்களுக்கு கல்வி கற்பதற்கு உதவும் "பிரெய்லி கல்வியை" (Braille System) கண்டுபிடிக்க தேவன் அவருக்கு உதவினார். அதன் மூலமாய், பார்வை இழந்த இலட்சக்கணக்கான பேர்கள் இன்று வேதம் வாசிக்கிறார்கள்! அதனிமித்தம் சுவிசேஷத்தை விளங்கிக்கொண்டு தேவனிடத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்!

Dr.மூன் மூலமாக நாமும் ஒரு நல்ல பாடத்தை கற்றுக் கொள்வோமாக! அவர், உலகப்பொருட்களை "முக்கியமானதாக" பொருட்படுத்தவேயில்லை! மாறாக, பவுல் அறிவுறுத்தியபடி உலகச் செல்வத்திற்கு "குப்பை மதிப்பையே" வழங்கினார்! **காண்கின்ற அநித்தியத்திற்கு மூன் குருடரானார்!** ஆனால் இவர் நித்தியத்திற்கு சேர்த்து வைத்த செல்வமோ ஏராளம், ஏராளம்! இவர் மூலம், நித்திய ராஜ்ஜியத்திற்கு பங்கடைந்தவர்களும் ஏராளம்! ஏராளம்! விசுவாச வீட்டார் தவிர, கண்பார்வை இழந்த திக்கற்ற புறஜாதி மக்களும் 'பிரெய்லி கல்வி முறையை' கைக்கொண்டு ஆறுதல் பெற்றார்கள்.

மேலும், இங்கு நாம் உற்றுநோக்க வேண்டிய விலைமதிப்பில்லாத ஜீவியம் என்னவென்றால்: " Dr.மூன் தன்னுடைய இழந்த பார்வையை மீண்டும் பெறுவதற்காக மன்றாடி, மன்றாடி, தன் வாழ்க்கையில் நொந்துபோகாமல்..... இந்த நிலையில், நான் எப்படி தேவனை மகிமைப்படுத்தி ஜீவிக்கலாம்?" என்றே எப்போதும் ஜெபித்தார்! இந்த ஜெபமே, Dr.மூன் தேவனை நோக்கிப் பார்த்த ஒளி நிறைந்த ஜெபமாய் நம்மையும் ஆசீர்வதிக்கிறது! விசுவாசத்தில் கொஞ்சமும் தளராத இந்த ஜெபமே, "**மூன், தன் பார்வை இழந்த நோக்கம்" நிறைவேறியதற்கு ஏதுகரமாய் அமைந்தது!** அவர் மூலமாய், தேவன் வல்லமையான கிரியை நடப்பித்து, "பிரெய்லி கல்வி" முறையை வெளிப்படுத்தினார்! பல்லாயிரம் பார்வை இழந்த மக்களுக்கு ஆசீர்வாதம் கொண்டுவரும் 'வாய்க்காலாய்' பயன்படுத்தினார்! அவர் மூலமாய், தேவனுடைய நாமம் சொல்லிமுடியா அளவிற்கு மகிமைப்பட்டது!

– Dr. மூன்

## உங்களை நடத்திட 'சந்தோஷமே' முன் செல்லக்கடவது!

**த**ன்னைப் பின்பற்றிய சீஷர்களுக்கு "சந்தோஷம்" எப்போதும் நிறைவாயிருக்கும்படியே இயேசு விரும்பினார்! இப்படிப்பட்ட குருவைப் பெற்றதற்கு, நாம் மிகவும் பெருமைப்படுகிறோம்! (யோ.15:11). கொல்கொதா அகோரத்திலும் "**சந்தோஷத்தையே**" தனக்கு முன்பு நிலைவரமாய் வைத்து, இயேசு வாழ்ந்து காட்டினார்! (எபி.12:2). இரண்டு கள்வர் மத்தியில் 'ஒரு கள்வனாய்' தொங்கிய இயேசு "அவமானத்தின் சின்னமாகவே" காட்சி அளித்தார்!

**நம் கண்களுக்கும் அவரை "காணத்தக்க ரூபம் இல்லாதிருந்தது!" (ஏசா.53:2). ஆனால், அவரின் ஆச்சரியமான நிலை என்ன தெரியுமா? "அவர் தனக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு" அவமானத்தை பொருட்படுத்தாமல், சிலுவையை ஜெயமாய் சகித்து வெற்றி சிறந்தார்!**

'தன் பிதாவின் அன்பில்' அவர் சகலத்தையும் சகித்து வாழ முடிந்தது! (1கொரி.13:7). மாறி மாறி வந்த துயரத்தின் படியில், இயேசுவோ 'மறுபடியும் மறுபடியும்' தன் பிதாவின் சமூகத்தையே 'சந்தோஷமாய்' தன் முன் நிலைத்திருக்கச் செய்தார்! 'சந்தோஷத்தை' முன்வைத்து வாழ்ந்த இயேசுவின் ஜீவியம், "கர்த்தருக்குள் சந்தோஷம்" என, பவுல் சவாலிட்ட வேத வாக்கியமாயிருக்கிறது! (பிலி.4:4).

தேவ ராஜ்ஜியத்தின் சந்தோஷம், பரிசுத்த ஆவியினால் உண்டான சந்தோஷம்! அப்படியிருக்க, நமக்கு முன் வைத்திருக்கும் அந்த சந்தோஷத்தை இவ்வுலகில் 'எதுதான்' பறித்துக் கொள்ள முடியும்? இயேசு அதற்கு விடையாக "ஒன்றும் உங்கள் சந்தோஷத்தைப் பறிக்க இயலாது!" என ஓங்கி ஒலித்து உத்திரவாதம் தந்தார்! (யோ.16:22).

**பிசாசின் மிகப்பெரிய தந்திரம், நமக்கு 'உயிர்நாடியாய்' இருக்கும் இந்த சந்தோஷத்தை திருடுவதுதான்! பாவிகளால் ஏற்பட்ட விரோதங்களோ, சொந்த மக்களால் வீசப்பட்ட அவமானங்களோ..... இயேசு தனக்கு முன் வைத்திருந்த, 'சந்தோஷத்தைப்' பறிக்க இயலவில்லையே!**

முடிவில், இந்த 'மாறாத சந்தோஷம்' நடத்திச் சென்ற உச்சஸ்தானமே 'பிதாவின் வலதுபாரிசம்!' (எபி.12:2). ஆம், பிதாவின் சமூகத்து நித்திய பேரின்பத்தில் ஜெயமே ஜெயமென அவர் அமர்ந்ததற்கு முக்கிய காரணம் "அவர் தனக்கு முன்வைத்து நடந்த சந்தோஷமே!". இவ்வாறு, இயேசுவுக்கு நிகழ்ந்ததைப் போலவே உத்தம சீஷர்களைச் சுற்றி சம்பவிக்கும் அனைத்து தீமைகளின் ஒரே நோக்கம் அவரது "**சீஷர்களின் சந்தோஷத்தை**" பறிப்பதுதான் என்பதை அறிந்து 'விழிப்புடன்' சிலுவையின் வழியில் கெம்பீரித்து முன்னேறக்கடவோம்!

– T. ரத்தினகுமார்

# புனித லாரன்ஸ்,

## உத்தம விசுவாசத்திற்கு 'உலையில்' சுட்டெரிக்கப்பட்டவர்!



( AD 258 )

கிறிஸ்தவ விசுவாசம் மறுமலர்ச்சி அடைந்த ஆரம்ப காலம், வெகு துயரத்தோடு ஆரம்பித்தது. அன்று ஆதிக்கம் செய்த ரோமானியர்கள், கிறிஸ்தவர்களை "மனுக்குலத்தில் வெறுத்து தள்ளப்பட்டவர்கள்" என்றே பெயர் சூட்டி அழைத்தார்கள்.

போப் சிக்ஸ்டஸ் *II*, ரோமானிய பேரரசன் 'வல்லேரியனால்' அழைத்து வரப்பட்டு, கொடூர சித்திரவதைக்குப் பின் அவரை சிரச்சேதம் செய்தான். அவரோடு இணைந்து சபையின் பொறுப்பு பணிகளை செய்து வந்த சகோதரன் லாரன்ஸ், சபையில் சேகரித்து வைக்கப்பட்டிருந்த பணத்தை எடுத்து வந்து, நகரத்திலுள்ள சபையின் ஏழை மக்களுக்கு தாராளமாய் கொடுத்து உதவினார். இதைக் கேள்விப்பட்ட பேரரசன் வல்லேரியன், சகோதரன் லாரன்ஸை அழைத்து வரக்கூறி "சபையில் மறைத்து வைத்திருக்கும் பொக்கிஷங்களை என்னிடத்தில் ஒப்படைத்தால், உன் உயிருக்கு நான் கருணை காட்டுவேன்!" எனக்கூறினார். மேலும், அவைகளை மூன்று நாள் அவகாசத்திற்குள் கொண்டு வரும்படி கட்டளையிட்டார்.

புனித லாரன்ஸோ, பட்டணத்திற்குள் சென்று பணத்தையோ, அல்லது தங்கத்தையோ எடுத்து வராமல், **சபையின் விசுவாசத்தில் கட்டிக் காக்கப்பட்டிருந்த,** திரளான ஏழை ஜனங்களையும், வியாதியினால் பெலவீனமான ஜனங்களையும் அழைத்து வந்து பேரரசன் வல்லேரியன் முன்பாக நிறுத்தி, **"இவர்கள்தான் எங்கள் பொக்கிஷங்கள்"** என தைரியமாய் கூறினார். கோபமடைந்த பேரரசன் "இவனை இரும்பு உலை அடுப்பில் போட்டு, நெருப்பில் வறுத்து, இம்சித்துக் கொல்லுங்கள்" என ஆணையிட்டார்.

அவ்வாறாகவே, நெருப்பு உலையில் லாரன்ஸ் வறுக்கப்பட்டபோது, தெய்வ பெலத்துடன் நெருப்பின் கொடுமையை சகித்துக்கொண்டார். அவரை வறுத்துக் கொண்டிருந்த வீரர்கள் ஆச்சரியப்படும்படி "நன்றாக வேகும்படி, என்னை அடுத்தப் பக்கம் புரட்டுங்கள்" என மனதிடத்துடன் கூறினார். புரட்டி புரட்டி வறுக்கப்பட்ட புனித லாரன்ஸ், தன் ஜீவிய கடைசி நொடியில் "நான் முற்றிலுமாய் நெருப்பில் வறுக்கப்பட்டு விட்டேன்! நீங்கள் யாவரும் என்னை புசிக்கலாம்" என கெம்பீரமாய் கூறி உயிர் நீத்தார். உத்தம கிறிஸ்தவ ஜீவியம் மற்றும் அதைச் சார்ந்த உத்தம ஊழியம், கிறிஸ்தவம் மலர்ந்த அந்நாட்கள் தொடங்கி இந்நாள் வரை "நெருப்பு உலையில் வறுக்கப்பட்டு, சோதிக்கப்படுவதையே" தொடர்ந்து நாம் காண்கிறோம். விசுவாச உறுதி கொண்ட கிறிஸ்துவின் சீஷர்கள் மாத்திரமே, இவ்வித துன்பத்தின் நடுவில், கிறிஸ்துவுக்கு ஜெயக்கொடி உயர்த்தி அவரை மகிமைப்படுத்துகிறார்கள்!

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

## "கற்பு ஒழுக்கமே" தேவன் அதிகமாய் விரும்பும் பரிசுத்தம்!

நமது வஸ்திரத்தில் ஒரு 'மை கறை' பட்டுவிடுமானால், அதை நாம் தண்ணீரில் நனையவைத்து சோப்பை போட்டு இலகுவாக எடுத்துவிடலாம். அதில் ஒரு 'கரிய தார் கறை' படும்பட்சத்தில், அதை நாம் மண்ணெண்ணையை பயன்படுத்தி அப்புறப்படுத்திவிடலாம். ஆனால், அதில் ஒரு 'வாழைக்குலையின் பால்' பட்டுவிடுமானால் அதை, எதை வைத்தும் எடுக்க இயலாது. நமது சட்டையில் அந்த வாழை மரத்தின் கறை தனித்து இருந்து கொண்டே இருக்கும். நமது வஸ்திரம் நாள்பட்டு பழமையாகிப்போனாலும் அந்த வாழைக்கறை சற்றும் மாற்றம் பெறாமல் அங்கேதான் இருக்கும். அதை போக்கடிக்கவே முடியாது. அதின் காரணமாகத்தான் வாழைத் தோட்டங்களில் வேலை செய்பவர்கள், அதற்கென்றே தனி வஸ்திரம் வைத்திருப்பார்கள்.

அதைப்போலவேதான் விபச்சார வேசித்தன பாவங்களும் ஆகும்! இந்த கொடிய வேசித்தனத்தால் தன்னை கறைப்படுத்திக்கொண்ட மனிதனுடைய பாவக்கறை, தனித்து நின்று கொண்டிருக்கும்! தாவீது ராஜாவுக்கு அது எப்பொழுதும் அவர் முகத்துக்கு முன்பாக நிழலாடிக் கொண்டிருந்ததாக வேதாகமத்தில் நாம் பார்க்கின்றோம் (சங்.51:3).

வேசித்தன பாவம் பரிசுத்த கர்த்தருக்கு கொஞ்சம்கூட பிடிக்காத காரியமாகும். "விபச்சாரம் செய்யாதிருப்பாயாக" என்ற கற்பனையை கர்த்தருடைய விரலே கற்பலகையில் எழுதினது மாத்திரம் அல்ல (உபா.9:10) தாம் எழுதியதை அக்கினியிலும், மேகத்திலும், காரிருளிலும் இருந்து இஸ்ரவேலருக்கு மகா சத்தத்துடன் அவர் சொன்னதாக தேவனுடைய வார்த்தை கூறுகின்றது (உபா.5:22). இதிலிருந்து, அது தேவனுக்கு எத்தனை கொடிய அருவருப்பான பாவம் என்பதை நாம் நன்கு நிதானித்துக் கொள்ளலாம்.

ஓ வாலிபனே! தினமும் தேவனோடு சில மணி நேரங்கள் ஜெபத்தில் செலவிட்டு, ஒழுங்காக உபவாசித்து, ஆண்டவரோடு நெருங்கி ஜீவிக்கும் தேவ மக்களை மாம்ச சிற்றின்ப 'ஆசை இச்சைகள்' எதுவுமே செய்ய இயலாது! அந்தப் பாவங்களை சாத்தான் அவர்களுக்கு விரோதமாக ஏவிவிட்டாலும் அந்தப் பாவங்களின் கவர்ச்சி அந்த மக்களைக் கண்டதும் "தொட்டால் சிணுங்கி" செடியைப் போல தங்களது தலைகளைத் தாழ்த்திவிடும்! அவைகள் அவர்களை ஒருக்காலும் மேற்கொள்ள இயலாது!

- சுவிசேஷ மலர்

பரலோக பொக்கிஷங்கள்

Published and Owned by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by SFA Print (P) Ltd., Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.